உ
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி க.	நள௵ கார்த்திகைமீ 1916௵ நவம்பர்மீ	பகுதி கo.

புதல்வர் கடமை.

(255-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மரியாதை:—இதுவே பிள்ளைகள் பெற்றோரைப் போற்ற வேண்டிய விதங்களில் இரண்டாவது ஆகும். இது கேவலம் சாமானிய மரியாதையாய் இராமல், பிற எவரிடத்துக் காட்டும் மரியாதையினும் பன்மடங்கு அதிகமாக இருத்தல் வேண்டும். பெற்றோருடன் சம்பாஷிக்கையில் அபிப்பிராய பேதம் உண்டாகும் பொழுது, அவர்களுடன அவமரியாதையாக வார்த்தை யாடாமல், பிள்ளைகள் உண்மையை அறியும் ஒரே நன்னோக்கத்துடன், அதி மரியாதையாக அவர்களுடன் பேச வேண்டும். சிற்சில சமயங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை அளவுக்கு மிஞ்சிக் கண்டித்துக் கடிந்துரைத்தாலும், அதற்காக அவர்களை வெகுண்டு கடுஞ்சொற் கூறி இகழலாகாது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

ஆதலின் மக்கள் இச் சமயம் செய்யவேண்டுவ தெல்லாம், அவர்களுக்கு எதிருரை கூறாது, அதிமரியாதையுடன் அவர்களிற் பிரிந்து செல்வதே.

"பெற்றோர்கள் மட்டும் கண்டபடி பேசி விடலாமா? 'தீயினாற் சுட்டபுண்'' என்ற குறள் வாக்கியம் அவர்கள் செய்கைகட்கும் பொருந்தாதா?" பொருந்துமாயின், பெற்றோர்களுக்கு மட்டும் உயர்வு ஏன்?'' என்று சிலர் துணிந்து கேட்கலாம்; பலர் கேட்கத் துணியா விடினும் எண்ணலாம். இங்ஙனம் எண்ணுவோரும் துணிவோரும் நன்கு கவனிக்க: "பெற்றோர்க்குரிய மரியாதை, அவர்கள் 'பெற்றோர்' என்ற ஒரே விஷயத்திற்கு ஆகவே யன்றி, அவர்களுடைய குணத்திற்காகவும் நடத்தைக் காகவும் அன்று'' என்பதை யாவரும் ஐயந்திரிபு அற அறிந்துணர வேண்டும். இது பற்றியே, பல்வேறு, கொள்கைகளைப் போதிக்கும் பல்வேறு மதங்கள் கூடத் "தந்தை தாய்ப் பேண்'' என்ற கட்டளையை முதற் கட்டளையாகப் போற்றி ஒழுகுமாறு தம்மைப் பின்பற்றுவோர்க்கு விதித்திருக் கின்றன. அவையாவும வேற்று மனிதரைக் கூறாமல் பெற்றோரை மட்டும் பிரத்யேகப் படுத்திக் கூறியதன் நோக்கம் என்ன? பெற்றோர் கல்லாதவராயினும், வேற்றுமனிதர்க்கு வெறுப்பையே விளக்கக் கூடிய விஷயங்களைப் புரிபவராயினும் நற்குணநற் செய்கைகளிற் குறைவற்றவராக இருப்பினும், தம்மினும் கல்வி அறிவு செல்வங்களில் தாழ்ந்தோரேயாயினும், அறியாமையால் தம்மை நிராதரவே செய்தவர் களாயினும், அவர்களை எக்காலத்தேனும், எவர் முன்னிலையினும், அகௌரவமாகப் பேசி இகழ்ந்துரைத்தல் இழுக்கே ஆகும்.

ஸ்ரீ கிருஷ்ணன் துர்யோதனனிடம் தூது சென்று பயனுறாது திரும்பியதும், இந்திரனை வரவழைத்து, "நின் மகன் அர்ச்சுனன் கன்னனது விரோதி என்பதை அறிவாயே. கன்னனிடத்துள்ள நாகாஸ்திரத்தால் அவன் இறவாதிருக்கவும், கன்னனைக் கொன்று அவன் ஜெயம்பெறவும் இப்பொழுதே ஒருகாரியம் செய்க. இச்சமயம்,

> வல்லார் வல்ல கலைஞருக்கும் மறைநூ லவர்க்கும் கடவுளர்க்கும்
> இல்லா தவர்க்கும் உள்ளவர்க்கும் இரந்தோர் தமக்கும் துறந்தவர்க்கும்
> சொல்லா தவர்க்கும் சொல்பவர்க்கும் சூழும் சமயா திபர்களுக்கும்
> அல்லா தவர்க்கும் இரவிமகன் அரிய தானம் செய்கின்றான்;

உடனே, நீ ஓர் கிழப்பிராமண வடிவத்துடன் கன்னனிடம் செல்.

அவனது உயிர்க்கும் வெற்றிக்கும் காரணமாயுள்ள கவச குண்டலங்களைத் தரும்படி கேள். அவன் மறான். உயிரேயாயினும் உவந்தீவன். அவற்றைப் பெற்று வந்தாலன்றி நின் மகன் பிழையான்'' என்னலும், இந்திரன் முதியோன் வேடம் பூண்டு, தனக்கிட்ட கட்டளைப்படியே சென்று, கன்னன் முன் நின்றான். அவனைக்கண்டதும் கன்னன் "நினக்கு யாது தேவை?" என்ன, இந்திரன், "யான் வேண்டுவ சில உள. ஆயினும் அவற்றை நீ தர ஒருக்கால் மறுத்தால் என்ன செய்கிறதென என்மனம் நின்னைக் கேட்கத் தியங்குகின்றது" என்றான். உடனே கன்னன் அவனது அவநம்பிக்கைக்கு இரங்கி, ''ஆ! என்ன கூறினை! 'தருகிறேன்' என்று கூறிய நான் சொல் மாறுவேனோ? மாறுவேனாயின்,

''மன்றில் வலிந்தோனும் மாதவரைச் செற்றோனும்
நன்றி மறந்தோனும் நானிலத்தில்—அன்றியுந்தன்
பெற்றவரைத் தான்இகழும் பேதையும் என்றிவர்கள்
உற்றவிடம் எய்துவன்யான் உற்று''

எனச் சபதம் செய்தான். இதுவே பெற்றோரை இகழ்ந்தாரைப் பேரர் எய்தும் பெருங்கேட்டை விளக்கப் போதியதன்றோ?

முற்றத் துறந்த பட்டினத்தடிகள், அயோக்கியர்கள் புவிச் சுமையாய்ப் பிறந்தமையை எண்ணி இரங்கிக் கூறுகையில்,

''ஓயாமற் பொய் சொல்வர், உற்றோரை நிந்திப்பர், உற்றுப் பெற்ற
தாயாரை வைவர், சதிஆயிரம்செய்வர், சாத்திரங்கள்
ஆயார், பிறர்க்குபகாரம்செய் யார்தமை அண்டினர்க்(கு) ஒன்று
ஈயார் பிறந்தென்? இறந்தென்னகாண்? கச்சி ஏகம்பனே''

என்று சொல்லியதும் ஞாபகத்தில் இருத்தத் தக்கதே. நிற்க.

''டில்லிக்குச் சக்ரவர்த்தி யாயினும் தல்லிக்கு மகனே'' என்ற பழமொழிக் கிணங்க, தான் எவ்வளவு உன்னத நிலை யுற்றிருப்பினும், பெற்றோரிடம் பயபக்தி விசுவாசத்துடன் தாழ்மையாகவும் வணக்கமாகவும் நடந்து கொள்ளும் மகனே மகனாவன். பல சொல்வானேன்? அவமரியாதையான எண்ணங்கூட உத்தம புத்திரனது உள்ளத்தில் ஒருபோதும் உதியாது என்பது உண்மை. இத்தகைய நன் மக்களைக் குறித்தன்றோ, பொய்யில் புலவர்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற" என்றது?

'தேவகுமாரர்' என்றும் 'லோகரக்ஷகர்' என்றும், விலிலிய நூற் பற்றுடையோரால் விசுவாசத்துடன் போற்றப்படும் இயேசுகிறிஸ்து, கேவலம் தச்சனேயான யோசேப்பின் மனைவியும் தமது மாதாவுமான மேரி யென்னும் நாரியினிடத்து நடந்து கொண்ட விதம் எவ்வளவு பாராட்டிப் புகழத்தக்கது!

மகா அலெக்ஸாந்தர் என்பவன், தான் அறிந்த உலகம் யாவையும் பெரும்பாலும் ஜயித்தவன். அவனுடைய தாய் ஒலிம்பியஸ் என்பவள் அவள் மிகக் கொடியவளாகவும் அதிகாரப் பிரியம் உள்ளவளாயும் இருந்தாள். அவள் ராஜாங்க விஷயங்களிலும் தலையிட்டு, அலெக்ஸாண்டருக்கு விளைவித்த தொந்தரவு இவ்வளவு அவ்வளவில்லை. ஆயினும், அவன் தனது அன்னைக்குச் செலுத்திய மரியாதையில் ஒரு சிறிதும் தாழவேயில்லை. அலெக்ஸாண்டர் ஒருசமயம் வேற்றூருக்குச் செல்ல நேர்ந்தபோது, தனது தேச காரியங்களை ஆன்டிபேட்டர் என்ற கவர்னரைப் பார்த்து வரும்படிக் கட்டளையிட்டுத் தனதன்னைக்கு இச்சமாசாரம் அறிவித்து, ஆன்டிபேட்டர் செய்யும் எக்காரியத்திலும் தலையிடாதிருக்கும்படியாக அதிக வணக்கமாக அவளுக்கு எழுதிக் கேட்டுக் கொண்டான். அலெக்ஸாண்டர் அதிமரியாதையாக எழுதிய அக்கடிதத்தைக் கண்டவுடன், ஒலிம்பியஸுக்கு வந்த கோபத்திற் களவில்லை. எவருமகேட்க ஸகியாத கடுஞ் சொற்கள் புனைந்த கடிதம் ஒன்று அலெக்ஸாண்டருக்கு அவன் எழுதிய கடிதத்திற்கு மறுமொழியாகக் கிடைத்தது. ஆயினும அலெக்ஸாண்டர் வாயே திறக்கவில்லை; 'மௌனம் கலகம் நாஸ்தி' என்று இருந்து விட்டான். அவன் இல்லாத காலத்தில் ஒலிம்பியஸ் ஆன்டிபேட்டரைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமில்லை. உபத்திரவம் பொறுக்க மாட்டாமல் ஆன்டிபேட்டர் அலெக்ஸாண்டருக்கு ஒரு நீண்ட கடிதம அனுப்பினன். அதில் அவன் "அரசே! என் செய்வேன்! நான் படும ஹிம்ஸை பொறுக்க முடியவில்லை. என் அவஸ்தையை, நான் எழுதும் பொழுதே விழுந்துள்ள கண்ணீர் நனைந்து கறைப்பட்டுள்ள

இக்கடிதமே காட்டும்" என்று கண்மணமுங் கரைய எழுதியிருந்தான். அதற்கு அலெக்ஸாண்டர் "ஆன்டிபேட்டர், அறுநூறு கடிதங்கள் அனுப்பினாலும் அவன் அனுப்பும் அத்துணைக் கடிதங்களையும் என் தாயாருடைய ஒரே கண்ணீர்த் துளி அழித்துத் துடைத்து அபலமாக்கி விடும் என்பதை அவன் அறியாமற்போனமைக்கு மிக விசனிக்கிறேன்" என்று சுருக்கமாக எழுதி அவளிடத்துத் தான் வைத்திருந்த மரியாதையை வெளிப்படுத்தினான். அரசனே ஆன அலெக்ஸாண்டர் அன்னையிடத்து வைத்த மரியாதையைப் பாருங்கள். நிற்க.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(276-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஏழாவது அதிகாரம்.

மக்கட் பேறு.

நுந்தையாம் யாளிதத்தர் நோன்பென்னோ? நும்முதலாம்
மைந்தரெழு வர்ப்பெற்றார் வள்ளுவரே!—முந்தப்
பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை. அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற (௧)

(அ-ம் முதலியன):—நுந்தை-உமது தந்தை, நோன்பு-விரதம்: பாக்கியம், மைந்தர்எழுவர்-திருவள்ளுவர் இடைக்காடர் கபிலர் என்ற சகோதரர் மூவரும், ஔவை உப்பை உறுவை வெள்ளி என்ற சகோதரிகள் நால்வரும், முந்த-சிறப்பாக, அறிவது-மதிப்பது, அறிவு அறிந்த-அறிய வேண்டிய விஷயங்களை அறியவல்ல.

"வள்ளுவர் நேரிசை"யில், "வாழ்க்கைத் துணைநலம்" என்ற அதிகாரத்தில் கூறியுள்ள ௬-வது செய்யளிற் சொல்லியபடி, பெருஞ் சாக்ரனது புதல்வனும் யாளிதத்தன் என்ற இயற்பெயருடையவனுமான பகவன் என்னும் அந்தணன், ஆதி யென்னும் ஆத(-அறிவில்லா)ப் புலைச்சியை மணந்து முற்கூறிய மக்கள் எழுவரையும் பெற்றதே இங்குக் குறித்ததாகும்.

தீநிரயம் நீங்கிச் சிறந்தார் இறந்தாரும்
வானிற் பகீரதனால் வள்ளுவரே!—ஏனோ?
எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். (உ)

(அ-ம் முதலியன) :— தீநிரயம்-கொடிய நரகம், வானில்-சுவர்க்கத்தில், இறந்தார்-கபில முனிவரது சாபத்தால் இறந்த சாகரர், பழிபிறங்கா-பிறரால்பழிக்கப்படாத, பண்பு-நற்குணம்.

பகீரதனால் இறந்தார் தீநிரயம் நீங்கிச் சிறந்தது:—இந்திரப்பட்டம் விரும்பி, ஸகரன் என்னும் சக்ரவர்த்தி 99 அசுவமேதம் செய்து, நூறுவதும் செய்யத் தொடங்குகையில், தன் பதவியை இழத்தற்கஞ்சிப் பொறாமை புற்ற இந்திரன், அவன் யாகம் செய்ய இருக்கும் குதிரையைக் கவர்ந்து, பாதலத்தில் தவம் செய்து கொண்டிருந்த கபில முனிவரது ஆச்ரமத்திற் கட்டிச் சென்றான். குதிரையைத்தேடி வருமாறு ஸகரனது மக்கள் 60000 பேர்களும் அனுப்பப்பட்டனர். அவர்கள் உலகெங்கும் தேடியும் அதனைக் காணாமையின், பூமியைத் தோண்டிச் சென்று, பாதலம் புகுந்து, குதிரையைக் கபிலரது முன்னிலையிற் கண்டனர். ஊழ்வினைப்பயனால் அவர்கள் கபிலரே அதனைக் களவாடியதாக எண்ணி, அவரை வைது துன்புறுத்தினர். உடனே அவர் சினந்து, அனைவரையும் நீறாக்கினர். இவ்வனம் நரகவேதனை புற்ற 60,000 பேர்களுக்கும் நற்கதி யடைவிக்கு மாறுதேவலோகத்திலிருந்த கங்கையைக் கொண்டு வரவேண்டி, ஸகரனது பேரனான அம்சுமானும், அவன்மகன் திலீபனும் தத்தம் வாழ்நாள் எல்லாம் முயன்றும் முடியாமற் போயிற்று. பிறகு திலீபனது மகனான பகீரதன் பல்லாயிரம் ஆண்டு தவமியற்றிக் கங்கையைத் தரிசித்து அதனை உடன்படுத்திக் அதன்வேகத்தைத் தாங்குமாறு சிவபெருமானை வேண்ட அவரும் அதற் கிணங்கினர். பிறகு பகீரதனுக்கு அளித்த வாக்குப் பிரகாரம் கங்கை (ஆத்திரத்துடன்) இழிய, சிவபெருமானைக் கண்டவுடன் தன் வேகமுற்றிலும் ஒடுங்கிப் பசும் புற்றரையில் விழுந்த பனித்துளி அளவாகி அவரது சடையில் அடங்கியது. அங்கிருந்து அது சிறிது பூமியில் இழிந்து பகீரதன் சென்ற இடங்களில் எல்லாம் சென்று, பாதலத்திலிருந்த அவனது முன்னோரது எலும்புகளை நனைத்தது. இறந்தோர் இதனால் நற்கதி யுற்றனர்'' என்பதே.

மேனாள் அறன்மகன்செய் வேள்வியால் உள்மகிழ்ந்தான்
வானோ டுறுபாண்டு வள்ளுவரே!— ஆனத
தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையால் வரும். (ரு)

(அ-ம் முதலியன):—மேல் நாள்-முன்னொரு காலத்தில், அறன் மகன்-தர்மபுத்திரன், வேள்வி-யாகம், வான் நாடு உறு-விண்ணுலகுசேர்ந்த, ஆறுத-நீங்காத, தம்மக்கள்-தம் மக்களை, அவர்பொருள்-அப்புதல்வர் சம்பாதித்த பொருள்கள், தம்தம்வினையால்-தம்மைக் குறித்து அவர் செய்யும் நல்வினையினாலே; வரும்-தம்மிடத்து உண்டாகும்.

அறன் மகன் வேள்வியால் பாண்டு மகிழ்ந்தது:—பாண்டவர்கள் மயனால் நிருமிக்கப்பட்ட இந்திரப் பிரஸ்தத்தில் இருக்கையில், திரிலோக சஞ்சாரியாகிய நாரதரிடம் தர்மபுத்திரர் ஒருநாள் சம்பாஷிக்க நேர்ந்தது. அப்பொழுது ஹரிச்சந்திரன் ராஜசூய யாகம் செய்தமையால் இந்திர லோகத்திலும், பாண்டு அதுசெய்யாமையால் யமலோகத்திலும் இருக்கும் விஷயம் நாரதர் தர்மபுத்திரனுக்கு அறிவித்து, "உன் தந்தை, உடனே உன்னை ராஜசூயயாகம் நடத்தித் தன்னை இந்திரலோகத்தில் இருத்துமாறு சொல்லினர்" என்னச் சொல்லிப் போயினா. தருமபுத்திரர் அவவாறு யாகம் செய்து தந்தையை மகிழ்வித்தார்" என்பதே.

செய்ய குசேலருந்தம் சேய்களொடு புன்கூழை
வையத் துவந்துண்டார் வள்ளுவரே!—துய்ய
அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (௪)

(அ-ம் முதலியன):—செய்ய-சீலம் மிக்க, குசேலர்-குற்சிதமான (அருவருக்கத்தக்க) ஆடையையுடைய 'சுதாமா' என்ற இயற்பெயருடையவர்; சேய்-குழந்தை, புல்-அற்ப, வையத்து-உலகில், உவந்து-மகிழ்ந்து, துய்ய-பரிசுத்தமான, ஆற்ற-மிகவும், அளாவிய-அளைந்த, கூழ்-அற்ப உணவு.

வறுமைப் பிணியால் வருந்திய குசேலர், பிரதிதினமும் நீவாரப்புல் தானியத்தைச் சிரமப்பட்டுச் சேகரித்துத் தம் மனைவி கைக் கொடுத்து அவளைக்கொண்டு அதைக் குத்துவித்து, அதனாலாகிய கூழைத் தம் 27 மக்கட்கு இட்டு அவர்கள் அளாவிய கூழைக்குடித்து இன்புற்ற விஷயமே இங்குக் குறித்ததாகும்.

தன்னைப் பழித்து(ம்) மக்கள் தம்மைக்கண் டின்புற்றான்
மன்னுநளன் அட்டிற்கண் வள்ளுவரே!—உன்னியக்கால்
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (௫)

(அ-ம் முதலியன):— அட்டில்கண்-மடைப்பள்ளியில், உன்னியக்கால்-எண்ணுங்காலையில், தீண்டல்-ஸ்பரிசித்தல்.

தன்னைப்பழித்தும், தன்மக்களைக் கண்டு நளன் இன்புற்றது:—கலி புருஷனது மாயையால் நாடு நகரங்களையும் மனைவிமக்களையும் துறந்த நளன், கார்க்கோடகனாற் கடியுண்டு, உருமாறி ருதுபர்ண்னனிடம் தேர்ப் பாகனாகவும் சமையற்காரனாகவும் வேலைக்கு அமர்ந்திருந்த காலையில், கற்பிற் சிறந்த தமயந்தியின் சூழ்ச்சியால் ருதுபர்ண்னனுடன் அவளிருந்த குண்டினபுரம் செல்ல நேர்ந்தது. அப்பொழுது தமயந்தி அவனைப்பற்றிய உண்மையை அறியத் தன் மக்களை ஓர் தோழிவசம் அனுப்பி அவன் முன் நிறுத்தினள். அப்போது அந்த

மக்களைமுன் காணா மனம் நடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர். யார்மக்கள்?'' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்

ஆகிய நளச்சக்கரவர்த்தி. இது கேட்ட அம்மக்கள், நளனை நோக்கி,

“மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கானவிட்(டு) அவன் ஏக—இந்நகரில
வாழ்கின்றோம். எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்'' என்றார் அழுது

நளன், இது கேட்டுத் தன் மகனது மனக்கருத்தை அறிய எண்ணி

''உங்கள் அர(சு)ஒருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே!'' என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

இம்மொழி கேட்ட அவன்மகன் இந்திரசேனன், சினந்து,

“நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர்? அடுமடையா!—எஞ்சாது
தீமையே கொண்ட சிறு தொழிலாய்! எம்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

எந்தைக் கழலிணையில எம்மருங்கும் காணலாம்
கந்து களியும் கடாக்களிற்றின—வந்து
பணிமுடியிற் பார்காக்கும பார்வேந்தர் தாமும்
மணிமுடியில் தோய்ந்த வடு''

என்று கூறினன். நளன் தன்னைத் தன் மகன் இங்ஙனம் பழித்துக் கூறியும் அதனைப் பாராட்டாது பெரு மகிழ்ச்சியே கொண்டவனாய் அவனை அன்பொடு தழுவி,

“மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை அறியா(து) உரை செய்த—என்னை
முனிந்தருளல்'' என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்'' என்பதே.

(இன்னும் வரும்)

ம. கோ.

உ

டோரா.

(264-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மறுநாட் காலை புறஅவள் எழுந்து,
குழந்தையை மீண்டும் கொண்டுஅத் திட்டினில
வந்துட் கார்ந்தனள். அந்தத் திட்டைச்
சுற்றிலும் முளைத்த பற்பல பூக்களைக்
கொண்டோர் மாலை கோத்தனள். தனது
சிறிய தந்தைஅச் சிறுவனைப் பார்த்த
வுடனே அவன்மனம் உவக்கும்படி, அவன்
தொப்பியைச் சுற்றிலும் சூட்டினள் அதனை.
உழவன் கழனியில் உற்றதும், அவளைக்
கண்டான். வேலையிற கண்ணு இருந்த
ஆட்களி னின்றும் அவளிடம் வந்தனன.
"எங்கே நேற்றைக் கெல்லாம் இருந்தனை?
ஈதுயார் குழந்தை? யாதுநீ செய்துகொண்
டிங்கிருக் கின்றனை?" என்னக் கேட்டனன்.
கேட்கலும், பூமியை நோக்கிய கண்ணுடன்,
"வில்லியத் தினது செல்வன் இவன்" என
மெல்லிய குரலுடன் சொல்லினள் டோரா.
"கூடா தென்னயான் கூறிட வில்லையா?
இல்லையா? டோரா!" என்றனன் ஆலன்.
"இஷ்டப் படிக்கெனைஏதும் செய்க.
ஆயினும் இந்தச் சேயினைப் பெறுக.
இறந்தவன் பொருட்டிதற் கின்னலம் புரிக"
என்ன டோரா இயம்பினள் மீண்டும்.
இயம்பலும், "தெரியும். இன்னது நீயும்
அங்கிருக் கின்றஅந் நங்கையும் கூடிச்
செய்த சூழ்ச்சி.என் செய்கடன் தன்னையான்
கற்கவேல் டுங்கொல்? மற்(று) அதும் நின்பால்!
'என்மொழி சட்டம்' என்பதை அறிந்தும்,

அஞ்சாதே நீ அலட்சியம் செய்தனை!
நல்லது; குழந்தையை நானே கொள்கிறேன்.
இவ்விடத் திருந்துநீ எகுக இன்னே.
எனது முகத்தில் இனிவிழி யாதே”
என்றனன் ஆலன். இங்ஙனம் கூறிக்
கொண்டே, திமிறிக் கொண்டும் இரைந்தும்
கூவிய குழந்தையைக் கொண்டனன். அம்மலர்
மாலை டோராக் காலில் வீழ்ந்தது.
தன்கர மேலதலை சாய்த்துப் போயினள்.
பையனின் அழுகுரல் பண்ணைநின் றவட்கு
வரவரத் தொலையி னின்றும வந்தது.
அவள்தான் ஆதியில் அவ்விடம் வந்த
நாளையும், பின்னர் நடந்த யாவையும்
நினைத்துத் தன்தலை குனித்து நின் றனளே.
மண்டி யிட்டவள் மறைவா அழுதனள்.
கதிர் அறுப்பவர்கள் கதிர்அறுத் தார்கள்.
வெயிலோன் குடதிசை வீழ்ந்தனன். வீழ்தலும்,
இருநில மெங்கும் இருளாய் இருந்தது.
டோரா பின்பு மேரியின் வீடு
சென்றதன் வாயிலில் நின்றனள். டோரா
இடத்திற் குழந்தை இல்லா திருக்கக்
கண்டனள் மேரி. வாய் விண்டனள், தனது
கைம்மையில் அருளிய கடவுளைத் துதித்தனள்.
துதித்தலும், டோரா சொற்றனள்: “எனது
சிறிய தந்தை சிறுவனைக் கொண்டனன்.
ஆனால் மேரி! யான்இனி நின்னுடன்
உறைந்து வேலைசெய் துய்பவள் ஆயினேன்.
எனை இனிக் காண்பதே இலைஎன் றனன்” என.
“என்பொருட் டாகநீ துன்புறல் கூடவே
கூடாது. அன்றியும் குழந்தையை அவன்கொளல்
ஒன்று தெனஇன் றெண்ணுகின் றேன்யான்:
அதுகல் நெஞ்சின னாகவும், தாயை
அவமதித் திடவும் அவன்கற் பிப்பன்.

ஆன படியி னலே, நீயும்
யானும் போவோம்..எனது மைந்தனைப்
பெற்றே வீட்டிற் குற்றிடு வேன்யான்.
மீண்டும் நினைக்கொள வேண்டுவன் அவனே.
திரும்பவும் நினைக்கொள விரும்பில னயின்,
நீயும நானு மேஒரு வீட்டில்
வசித்து, வில்லியம் சிசுக்கு நம்மைப்
பாலித் திடுகிற பருவம் வரும்வரைப்
பாடுபட் டுழைத்ததைப் பாலித் திடுவோம்"
என்றனள் மேரி. என்றதும், அந்த
அரிவையர் இருவரும் ஒருவரை யொருவர்
இன்பொடு முத்த மிட்டுக் கொண்டு, பின்,
புறப்பட் டந்தப் புலம்போய்ச் சேர்ந்தனர்.
வாயில் தாழிடா வண்ணமா இருந்தது.
பார்த்தனர் எட்டி, பையன் பாட்டனின்
இருதொடைக் கிடையி லும் இருக்கக் கண்டனர்.
கைகளால் அவனைக் கட்டி அணைத்து,அவன்
பேரில் மிக்க பிரியம் காட்டிக்
கைகள் கன்னங் களிலே தட்டினன்.
ஆலன் கைக்கெடி யாரத் திருந்து
தொங்கிக் கொண்டங்(கு) அங்கியில் மின்னிய
பொன்முத் திரையினைத் தன்கை யினிற்கொள
நீட்டி மிழற்றி நின்றனன் பையன்.
இப்பொழு தவர்களவ் இல்லினுட் புகுந்தனர்.
ஆயினும், சேய்தன் தாயினைக் கண்டதும்,
அவள்பாற் செலஅழ ஆரம பித்தது.
ஆதலின், கீழே அதைச்செல விடுத்தனன்.
"மாமா—தம்மைத் தாமவ் விதமா
அழைத்திட நீரெமக் கனுமதி தருவிரேல்,
என்பொருட் டேதுமே இரக்கயான் வந்திலேன்.
வில்லியம் அல்ல(து) இச் செல்வனின் பொருட்டும்
இரந்திட வந்திலேன். யான்டோ ராவின்
பொருட்டே இவ்விடம் போந்தனன். ஐய.!

அவளை மீண்டும் அங்கி கரிமின்.
நும்பால் மிக்க அன்பார்ந் தவள் அவள்.
எந்தாய்! இறக்கையில் எல்லா ரிடத்தும்
எப்பிலைக் கின்றியும் இறந்தனன் வில்லியம்.
அவன்மன நிலையையான் அறிந்திடும் வண்ணம்
அவனையே கேட்டேன்; அறைந்திட் டான்அவன்:
எனைமனைத் தகன்பொருட் டென்றைக் காயினும்
அவன்மனத் துயரம் அடைந்ததே இலைஎன.
இருந்தேன் பொறையுள இல்லா ளாய்நான்.
ஆயினும் ஐய! தன் ஐயன் மொழியினை
அவ்வித மாக அலட்சியம் செய்தது
தவறே யென்ன அவனே மொழிந்தனன்.
"இறைவன் எந்தைக் கின்னருள் புரிக
இனிமேல் என்றைக் கேனும் அவர்என்
அருந்துயர் அனைத்தையும் அறியா ராகுக"
என்றிவை கூறித் தன்முகம் திருப்பவும்
ஜீவன் பிரிந்து சென்றது அந்தோ!
அபாக்கிய முள்ளவள் ஆயி னேனே!
இவ்வள வெல்லாம் ஏனோ? எனது
தனயனை என்பால் தருமின். ஏனெனில்,
அவனைக் கன்மன னாகச் செய்வீர்.
தந்தையின் ஞாபகந் தனைஅலட் சியம்செய
அவன்கற் றிடுவா னவ், டோ ராவை
மீண்டும் ஏற்றிட வேண்டுகின் றேன் உமை.
யாவும் முன்போ லேயிருந் திடு"வென
மேரி இயம்பலும், டோரா, மேரியின்
மருங்கே தன்முகம் மறைந்திட நின்றனள்.
அறையெலாம் நிசப்த மாக இருந்தது.
இருந்தாற்போல இருந்துஅக் கிழவன்
பொருமிப் பொருமிப் புலம்ப லாயினன்.
"குற்றம் எனதே. குற்றம் எனதே.
என்றன் மகனைக் கொன்றவன் யானே.
கொன்றேன் ஆயினும், நன்றே அவன் பால்

அன்புவைத் திருந்தேன். அருமைப் புதல்வ!
ஈசன் என்பிழை யினைப்பொறுத் தருள்க.
குற்றச் சாட்டிற் குற்றவன் யானே.
"குழந்தைகாள்! முத்தம் கொடுமின் எனக்கு" என்
றழுதனன். உடனே அவர்கள் அவனது
கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு
அவற்கு முத்தம் அளித்தனர் பன்முறை.
பச்சாத் தாபப் பட்டனன் முற்றும்.
மாறிய அன்பெலாம் நூறு மடங்காத்
திரும்ப லுற்றது. சிந்தையில் வில்லியம்
தனைநினைந் தவனது தநயனை நோக்கி,
விம்மி அழுதனன் மும்மணி நேரம்.
இதற்குப் பின்னர், இந்த நால்வரும்
ஓரகத் தேயே உறைந்தனர் ஒருங்கே.
ஆண்டுகள் அநேகம் ஆனதும், மேரி
மற்றும் ஒருவனை மணமுடித் திட்டாள்.
ஆயினும் டோரா வோஇறந் திடும்வரை
கன்னியாக் காலம் கழித்துவந் தனளே.

ம. கோபாலகிருஷ்ணையர்.

ஆத்திசூடி வெண்பா.

(256-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தந்தை புறக்கணிப்பத் தாளா தருந்தவமும்
சிந்தைவலித் தேதுருவன் செய்திட்டான்—ஐந்தாண்டில்
ஆக்கம் பெறவே யழியாமல். ஆதலினால்
ஊக்கமது கைவிடேல் உன்

[(உரை) தந்தை—பிதாவாகிய உத்தானபாத மஹாராஜன், புறக்கணிப்ப—(தன் மடிமீதேற விரும்பி வந்த மைந்தன் கருத்தறிந்தும், மாற்றாந்தாயாகிய தன் இளைய மனைவியின் கோபத்திற் கஞ்சிக் கவனியாதவன் போல்) பாராமுகம் செய்ய; தாளாது—பொறாது, அருந்தவமும்—உரிய வய

தினாலும் செய்தற்கருமையாகிய தவத்தினையும், சிந்தை வலித்தே—மன திற் கொண்ட உறுதிப்பாட்டினால், ஐந்தாண்டில் தனது ஐந்தாவது வய திலேயே, துருவன்— துருவன் என்னும் பாலன், ஆக்கம் பெறவே—அழி வில்லாத இருவகைச செல்வத்தினையும் பெறும் படியாக, அழியாமல்— மனத்தளர்ச்சியின்றி, செய்திட்டான்—கடுமையாகப் புரிந்தான, ஆதலி னால்—ஆகையினால், ஊக்கம் அது—சோர்வில்லா மனமுயற்சியை; கைவி டேல்—ஒருபோதும் கைவிடக் கூடாது, உள்—இதனை உன்னுள் கருது வாயாக.

என்னை? விசுவாமித்திரர் முதலிய பெரியோராலும் செய்து எளிதில் நிறைவேற்ற முடியாததான தவத்தினை (வாயுவை ஆகாரமாக ஏற்று ஐந்து வயதுள்ள இளைஞனாகிய) துருவன் ஆற்றி, என்றும் அழியாத உயர் நிலையை அடைந்தான் என்பதை நோக்கும்போது, சரீரபலம், மனோபலம், அப்பியாஸம் முதலிய அனைத்தும் அடைதற் கியலாப் பருவத்தில், இத் துணைப் பெரிய ஸாஹஸச் செய்கையினை நிறைவேற்றியதற்கு முதற்கருவி அவ் ஊக்கமே யன்றி மற்றில்லை.

அவ்வகைய ஊக்கத்தினைத் துருவன் கைக் கொண்டமையால், தந் தையின் மடிமீதேற எண்ணியவன், மேருவின் முடிமீதே ஏறி என்றும் புக ழுடம்பு கொண்டு, இன்றும் நட்சத்திர வடிவமாகப் பிரகாசிக்கின்றான் என்றுணர வேண்டும்.

எடுத்த காரியத்தை முடிக்க இதரர்களின் உதவியைக் கோருபவர் கட்கும் இது நல்ல உதாரணமும் புத்தியுமாகும். மனிதர்க்கு ஊக்கம் ஒன்றிருந்தால் அதனால் எல்லாக் காரியங்களையும் இனிதில் அவர்கள் சாதிக்கலா மென்பதும், அஃதில்லார்க்கே இதர சாதனங்கள் வேண்டப் படு மென்பதும் முக்கிய குறிப்பாகும்.

(இன்னும் வரும்.)

அசலாம்பிகை அம்மாள்.

சாணக்ய சாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(268-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

க்ஷபணகனது சிஷ்யன் வேகசர்மன, நந்தர்கள் ஜபசாலைக்கும் வரும் சமயத்தைச சாணக்யனுககு அறிவித்தான். அறிவிக்கவும், சாணக்யன் சேனாபதியாகிய சேகரனை வரவழைத்து. "இன்று இரவே உன்னிடத் துள்ள சேனை வீரரில் 30,000 பேர்களுக்குக் காசி ராஜ சைந்யம் போல் வேஷம் போட்டுப் பாடலிபுரமிருந்து காசிநகர்க்குச் செல்லும் வழியில் இறங்கி இருக்கவேண்டு மென்றும், எனது உத்திரவுப்படி அவர்கள் நட ந்து கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு செய்." எனக் கட்டளை யிட்டான். அப்படியே விபூதி ருத்ராக்ஷங்களால் 30000 பேர்கள் காசி

ராஜனது படையாட்கள் போல் அலங்கரிக்கப்பட்டு, குறித்த இடத்திற்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் காசிக்குச் செல்லும் வழியிற் போகும் போது, பர்வத தேசமிருந்து குதிரைவீரர் இருவர் வந்து, சாஹூரி நகரைக் காத்துக் கொண்டிருந்த அங்காரவர்மன் என்பவன் கொடுத்தனுப்பிய கடிதத்தைப் பர்வதேசனிடம் தந்தனர்.

அக்கடிதத்தில் தக்ஷசீல சூரசேனபதிகள் பர்வதேசனது தலைநகராகிய சாஹூரியை முற்றுகையிடுகிறார்கள் என்றும், எவ்விதமேனும் பர்வதேசன் சகல படைகளுடனும் ஊருக்குத் திரும்பி விடவேண்டியதவசியமென்றும் எழுதப்பட்டிருந்தது. பர்வதேசன் திடுக்கிட்டு 'என்ன செய்யலாம்!' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, நந்தர் சைந்யங்களுக்குத் தக்ஷிண திக்கிலிருந்து உபபலம் வரும் விஷயத்தை வேறு சில தூதர் அறிவித்தனர். பர்வதேசன் மனம் கலங்கிச் சபரவர்மனை அழைத்து விஷயங்களை எடுத்துக் கூறி 'நமது ராஜ்யமே நம் கைவிட்டுப் போகும் நிலையில் இருக்கிறதே! இந்தச் சங்கடத்திற்கென்ன செய்யலாம்!'' என ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தான்.

இச்சமயம் ராக்ஷஸனால் அனுப்பப்பட்ட விஷ்ணுதாஸன் பர்வதேசனிடம் வந்து, அவனுக்கு அதைரியம் உண்டாக எவ்வளவு கூறவேண்டுமோ அவ்வளவும் கூறி "சந்திரகுப்தனை நந்தர்களிடம் ஒப்பிவித்து விடுங்கள். அவனது தகுதிக்கேற்ற ஒரு வேலையில் அவனை நந்தர்கள் நியமிப்பதாக வாக்களிக்கின்றார்கள். அவன் உங்களுக்குத் தருவதாகச் சொல்லிய யாவும் நந்தர்கள் தந்து விடுவார்கள். வீண்சிரமம் ஏன்? நன்றாக யோசியுங்கள்" என்றான்.

ஏற்கனவே திகிலுற்ற பர்வதேசன், ராக்ஷஸனது நயவஞ்சகத்தை உணராது, தனக்குள், "நாம் இப்பொழுது உள்ள நிலைமை நமக்குத் தெரியும். நாமே வலிந்து சமாதானம் பேசவேண்டியிருக்க, நந்தர்களே சமாதானம் பேச முற்பட்டது நம் அதிர்ஷ்டமே" என்றெண்ணி, விஷ்ணுதாஸனை நோக்கி "சந்திரகுப்தனை வியாஜமாகக் கொண்டு உங்கள் ராஜ பொக்கிஷங்களைக் கொள்ளையடித்துச் செல்லும் நோக்கமுடன் நாங்கள் வரவில்லை. சத்துருக்களுக்கு அஞ்சிச் சரண் அடைந்த சந்திரகுப்தனுக்கு அவனது பாட்டனது ராஜ்யம் வாங்கித்தர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தான் யுத்தம் செய்கிறோம். நீங்கள் இவ்வளவு தூரம் சொல்வதால் ஒரு காரியம் செய்யுங்கள். நந்தர்களைச் சரிபாதி ராஜ்யம் சந்திரகுப்தனுக்குத் தருமாறு செய்து விட்டால் யுத்தத்தை நிறுத்திவிட எங்களுக்கு ஆக்ஷேபமேயில்லை. இதை நந்தர்களுக்கும் ராக்ஷஸர்க்கும் அறிவித்து அவர்களது க்ஷேம லாபங்களை விசாரித்ததாகச் சொல்லவும்" என்று கூறி அவனை உபசரித்து அனுப்பினான்.

நியோகி சென்றதும், பர்வதேசன், தனக்கும் அவனுக்கும் நிகழ்ந்ததைச் சபரவர்மனுக்கு அறிவித்தான். தன்னைச் சரண் அடைந்த சந்திரகுப்தனை அவனது சத்துருக்களிடம் பர்வதேசன் சுய நன்மை கருதியும் லோகாபவாதத்திற்கு அஞ்சாமலும் ஒப்புவிக்கத் துணிந்தமைக்குச் சபரவர்மன் வருந்தி அரசனை நோக்கி "ஸ்வாமி! தாங்கள் உரைத்தது சமயோசிதமானதே. ஆயினும் இதைச் சாணக்யருக்கு அறிவிக்க வேண்டியது நம் கடமை. இதற்கு அவர் இசையாவிட்டால் தங்கள் மனப்படி காரியத்தை நடத்தி விடுவது தானே" என்றான். பர்வதேசனும் 'சரி' யென்று

சாணக்யனுக்கு ஆள் விடுத்தான். இதற்குள் சர்வவர்மன் அரசனிடம் விடை பெற்றுச் சென்றவன், அரசனது விருப்பின்படி வந்து கொண்டிருக்கும் சாணக்யனைத் தற்செயலாகக் கண்டு, ஜாடையாக விஷயங்களைக் கூறிப் போயினன்.

பிறகு சாணக்யன் பர்வதேசனிடம் வந்ததும், அவன், தனது நிலைமையை அவன் மனதிற் படும்படி கூறி "நான் தவித்துத் தத்தளிக்கும் இச்சமயம், நந்தர்களே சந்திபேச முற்பட்டிருக்கின்றனர். இப்பொழுது நாம் அவர்கள் வேண்டுகோட் கிசைந்து விட்டால் நமக்குச் சில தேசங்களும் பெருஞ் செல்வமும் கிடைக்கும். இவற்றைச் சந்திரகுப்தனுக்களித்து, அதிபதியாக்கி, அவனுக்கும் நந்தர்களுக்கும் உள்ள பகையைப் போக்கி அதனால் புகழுற்று நம் தேசம் செல்லலாம் எனத் தோன்றுகிறது. உங்கள் யோசனை என்ன?" என்றான்.

சாணக்யன் ராக்ஷஸனது கபடத்தை வியந்து, அரசனை நோக்கி "அரசே! உலகில் பலமற்றவர்கள் பலசாலிகளிடம் வந்து சமாதானம் வேண்டுவது வழக்கமாக இருக்க, முதல் நாள் யுத்தத்தில் ஜயமடைந்து, மறுநாள் சமயுத்தம் செய்து பலிஷ்டர்களாக இருக்கும் நந்தர்கள், இப்போது சமாதானம் பேசுவது உண்மையாகுமா? யுத்தம் நடவாது தாமதப்படுத்தி நஷ்டமான நந்த சைனியங்களுக்குப் பதில் சேனை வருமளவும் காத்திருந்து அது வந்ததும் யுத்தம் தொடங்கி ஜயிக்க எண்ணியே ராக்ஷஸன் செய்த யுக்தி இது. பர்வதேசன் என்று பெயர்படைத்த நீ இங்ஙனம் மனங்கலங்கலாமோ? இப்பொழுது நான் சொல்லுகிறபடி கேள். பிறகு முடிவைப் பார். உடனே உன் நகரைக் காக்கும் அங்காரவர்மனுக்கு,

"உன் கடிதம் கிடைத்தது. நேற்றைய யுத்தத்தில் நந்தர்கள் ஸம்ஹரிக்கப்பட்டு விட்டனர். பாடலீபுரம் எங்கள் கைவசமாகி விட்டது. ராக்ஷஸன் மட்டும் எங்கோ ஓடி ஒளிந்து விட்டான். இன்னும் அகப்படவில்லை. நம் பக்கங்களில் அவனை யாரேனும் கண்டால் அவனைப் பிடிக்க ஏற்பாடு செய்க. பிடிப்பவனுக்கு லக்ஷம் பொன்னும் 100 கிராமங்களும் வெகுமதியளிக்கவும். நம் வெற்றியை யாவரும் அறிய ஜயபேரிகை அடித்து ஜனங்களை உத்ஸவம் கொண்டாடும்படிக்கும் கோவில்களில் அபிஷேகம் ஆராதனம் செய்யும்படிக்கும், ஏற்பாடு செய்ய வேண்டியது."

என்று எழுதி உன் முத்திரை யிட்டு அனுப்பு. ஜயோத்ஸவக் கொண்டாட்டத்தையும், ஜயபேரிகை முழக்கையும் அறிந்தவுடன் தம்பட்ட ஓசை கேட்டதும் ஓடும் அற்பப் பிராணிகள் போல் தகாரண சூரசேநாதிபதிகளின் சைனியம் ஓட்டம் எடுக்கிறதா இல்லையா என்று பார்" என்றான்.

சாணக்யனது சமயோசித சாமர்த்தியத்தை மெச்சிய பர்வதேசன், அவனை நோக்கி "தக்ஷிணதிக்கிலிருந்து நந்தர்களுக்கு உதவியாக வரும் சேனைகளுக்கு வழியென்ன?" என்றான. அதற்குச் சாணக்யன் "உனக்கேன் கவலை? பஞ்சாக்ஷர ஜபத்தால் பறந்தோடும் பாபம் போல், இன்று அல்லது நாளையே அச் சேனைகளும் ஓடி விட்ட செய்தி கேட்டு மகிழ்வாய்" என்றான். பர்வதேசன் இதுகேட்டு "என்மனக்கலக்கத்தை மாற்றி மகிழ்ச்சி தரக்கூடிய வார்த்தைகளே இவை. ஆயினும் எனது அதிர்ஷ்டம் வேறு விதமாய்ப் போய்விட்டால் அப்போதேனும் நந்தர் விருப்பத்தை நாம் நிறைவேற்றித் தீரவேண்டு மன்றோ?" என்னலும், சாணக்கியன் கடுங்

கோபங்கொண்டு, "சந்திர குப்தனை நந்தர்களிடம் நீ ஒப்புவிப்பது என்பது முடியாத காரியம். நான் மரண மடைந்து, எனது பௌருஷமும் நஷ்டப்பட்டு, எனது தவமாகிய சஸ்திர முனையும் மழுங்கிவிட்டாலன்றோ, சந்திரகுப்தனை ஒப்புவிப்பதைப் பற்றியோசிக்க வேண்டும். நான் உயிருடனிருக்கையில் இது நடக்குமாகில்—" என்று கர்ச்சித்து எழுந்து, கேட்டோர் அஞ்சத்தக்க பல கொடுஞ் சபதங்களைக் கூறி இரையலானான். இச்சமயம், பர்வதேசனிடம் ஒற்றர் இருவர் ஓடிவந்து "காமரூபாதிபதி சூரியவர்மனுக்கும் லம்பாகாதிபதி கீர்த்திவர்மனுக்கும் நிகழ்ந்த அகோர யுத்தத்தில், லம்பாகமன்னன் தோற்றுக் காமரூபாதிபதியுடன் சந்தி பேசிக் கொண்டிருக்கும் விஷயம்" அறிவித்தனர். பர்வதேசனுக்கு என்றுமில்லா மகிழ்ச்சியுண்டாகிச் சாணக்யனது சாமர்த்தியத்தைப் பலவாறு புகழ்ந்தான். உடனே சாணக்யன் "இது ஒரு பிரமாத ஜயமா? இன்று கிடைக்கும் ஜயத்தையும் சந்தோஷத்தையும் அல்லவோ அறிந்து நீ மகிழ வேண்டும். உனக்கு உண்மையில் ஜயம் வேண்டுமாயின் சேகரனை ஸர்வ சேனாதிபதியாக்கி அவனை என்னிடம் அனுப்புக" என்று கூறித் தன் விடுதி சென்றான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

கமலாவதி.

அங்கம்–3.

காட்சி-1.

இடம்.—மாளவ நாட்டில் மோஹனனின் சயனக்கிருஹத்தை அடுத்த ஓர் தாழ்வாரம்.

காலம்.—இரவு.

[மோஹனனும், கொரேசேனனும் ஏதோ வார்த்தையாடிக் கொண்டு இருக்கிறார்கள். கொரே சேனன் அடிக்கடி அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருக்கிறான்.]

மோ. கோரேசேனரே! இதைத் தவிர வேறு உபாயம் ஒன்றும் இல்லையா? களங்கமற்ற ஸ்ரீதரன்மீது இப்பெரும் பழியைச் சுமத்த என் மனம் எப்படித் துணியும்?

கோ. அம்மணி! என் நன்மையைக் கருதி, இது சொல்லுகிறேனென்று எண்ண வேண்டாம். இது தங்களுடைய நன்மைக்காகவே யல்லாது, வேறில்லை. தங்களுக் கிஷ்டமில்லாவிட்டால், எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து கொள்ளுங்கள். எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். தங்களுக்கிஷ்டமில்லை. உம் — சரி, இனி நான் பேசுவதிற் பயனென்றுமில்லை. (ஆசனத்தை விட்டெழுந்து) சரி, எனக்கு விடை யளியுங்கள் நான் செல்வதற்கு.

மோ. ஏன் கோபம் தமக்கு?, இப்பெரும் பழியை ஸ்ரீதரன்மீது சுமத்துவதென்றால், என் மனம் துணிய வில்லையே!

கோ. எப்படியாவது நம் காரியத்தை நாமே சாதித்துக் கொள்ள வேண்டும். அதற்கு இதுவே சரியான உபாயம். வேறு எவ் உபாயமும் சரியென்று என் மனதிற்படவில்லை. என்ன சொல்லுகின்றீர்கள்? நான் இனி இங்கு தாமதிப்பது சரியல்ல. மஹாராஜா அவர்கள் வரும் சமயம் நெருங்கி விட்டது.

மோ. சரி, உம் — உம் — அப்படித்தான் செய்ய வேண்டும் போலிருக்கின்றது?

கோ. ஸ்! இதென்ன, தங்களுக்கு இன்னும் மனோதிடம் ஏற்பட வில்லையே! காரியம்-ஜயம் அடைய வேண்டிய மார்க்கத்தைப் பார்ப்பதை விட்டு, என் வீண் கவலைகளெல்லாம்?

மோ. உம் — அப்படியே செய்கின்றேன்.

கோ. அம்மணி! தாங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், இவ் விஷயத்தில்.

மோ. அதெல்லாம் எனக்குத் தெரியாதா? நான் பார்த்துக் கொள்ளுவேன். அதைப் பற்றித் தமக்கு ஒரு கவலையும் வேண்டாம்.

கோ. சரி, நான் போய் வருகின்றேன். [போகிறான்.]

மோ. இது சரியான உபாயந்தான். ஆனால், என் மனம் துணிய வில்லையே! என்ன செய்வேன்? (சற்று தாமதித்து) சரி, இனி அதைப் பற்றிக் கவலைப் படுவதிற் பிரயோஜனம் ஒன்று மில்லை. நான் அப்படித் தான் செய்ய வேண்டும்.

[ஓர் புறமாகப் படுத்து, நித்திரை செய்கிறவள் போல அபிநயிக்கி றாள். சற்று நேரத்திற் கெல்லாம் வசந்தசேனன் பிரவேசிக்கிறான்.]

வ. (தனக்குள்) கண்மணி! கண்மணி! எங்கு சென்றாய்? உன் னைச் சயனக் கிருஹத்திலும், இன்னும் எங்கெங் கெல்லாம் நான் தேடுவது?(திடீரென்று)யார்இங்கேசயனித்துக்கொண் டிருக்கின்றது? என் காதலி தானோ? (மோஹனாவின் சமீபத்திற் சென்று) ஆம். அவள் தான். இவள் இங்கு சயனித்துக் கொண்டிருக்கக் காரண மென்ன? (வெளிப் படையாக) மோஹனா! மோஹனா! (சற்றுத்தாமதித்து) நித் திரை செய்கின்றாற் போலிருக்கின்றது. (அவள் கரத்தைப் பிடித்து) கண்ணே! நீ இங்கேன் தனிமையாகச் சயனித்து—

மோ. [பயந்தவளைப் போலபிநயித்து]

ஆ! பாவி! ஐயோ! என்னை இங்கும் தொந்தரவு செய்ய வந்து விட்டாயா? கடவுளே! நீயே கதி.

வ. (திடுக்கிட்டு) என்ன, நான் காண்பது கனவோ!

மோ. [வசந்தசேனன் முகத்தை நோக்கி, திடீரென்று அவனைக் கட்டிக் கொண்டு]

ஆ! பிராணநாதா! பிராணநாதா! என் பிரார்த்தனை வீணாக வில்லை. நினைத்த மாத்திரத்தில் தாங்களே பிரத்யக்ஷ கடவு ளாக வந்தீர்களே! (பதட்டத்தை அபிநயித்துப் பெருமூச் சுடன்) போகட்டும், இம்மட்டாகிலும் நான் பாக்கியம் செய்திருந்தேனே. எல்லாம் விதி— (ஆசனத்தை விட் டெழுந்து) பிராணநாதா! செல்வோம் வாருங்கள்.

வ. கண்ணே! நீ இப்படித் திடீரென்று பீதியடையக் காரண மென்ன? "ஆ! பாபி!" என்றனையே! யார் அவன்? (கோபத் துடன்) அவன் யாராக இருந்தாலும் சரி, அவனை இப் பொழுதே—

மோ. பிராணநாதா! அதிருக்கட்டும், பிறகு பேசிக் கொள்வோம். எழுந்திருங்கள். செல்வோம்.

வ. மோஹனு! அப்பாதகன் இன்னுனென்று தெரிந்த பிறகே மற்றக் காரியத்தில் பிரவேசிப்பேன். (படபடப்புடன்) அப் பாதகன் யார்? அவனுல் உனக்கு நேரிட்டிருக்கும் தீங் கென்ன? வா, இப்படி உட்கார்ந்து கொள்.

[தன் பக்கத்தி லுட்காரும்படி செய்கிறுன்.]

மோ. பிராணநாதா! அதிருக்கட்டும்.

வ. ஸ்! முதலில் அப்பாதகன் இன்னுனென்று சொல்வாய்! கண்ணே! பயப்படாதே.

மோ. அவனைக் காட்டிக் கொடுப்பதற்கு எனக்கு மனம் வரவில் லையே!

வ. அப்படியல்ல, கண்ணே! அவனுல் நீ அடைந்த தீங்கென்ன?

மோ. பிராணநாதா! போனது போகட்டும். இனி ஜாக்கிரதை யாக இருந்தால் போகின்றது. ஆனுல் அவன் இத் தீயமார்க் கத்தில் பிரவேசித்ததைப்பற்றி நான் மிகவும் விசனப் படு கின்றேன்.

வ. ஸ்! விஷய மின்ன தென்று சீக்கிரம் தெரிவிப்பாய். ஏன் வீணுகக் காலதாமதம் செய்கின்றுய்?

மோ. பிராணநாதா! நான் சொல்வதைக் கேளுங்கள். கைவிரல் கண்ணைக் குத்திவிட்டால், அதற்காக நாம் அந்த வெட்டி விடுவோமா? அவன் ஏதோ சிறுபிள்ளைத் தனமாகச் செய்து விட்டான். அதற்காக நாம் அவனை—

வ. (கோபத்துடன்) எதற்காக வீண் கதைக ளெல்லாம்! அப் பாபியார்? அவன் செய்த தென்ன? எனக்குத் தெரிய வேண் டியது இதுதான்;

மோ. இதென்ன கஷ்டம்? ஐயோ! இப்படி வருமென்று யார் கண்டார்கள்? நான் தங்களை அவனென்று நினைத்தே மோசம் போனேன்! அவன் என்னைத் தொந்திரவு செய்ய வந்து விட்டானென்றல்லவோ ஏதோ பிதற்றினேன்?

வ. (கோபத்துடன்) சீக்கிரம் சொல்.

மோ. கோபம் வேண்டாம். "இனிமேல் நீ அப்படிச் செய்வது சரியல்ல" வென்று தாங்கள் அவனுக்குப் புத்திவரும்படி செய்தால், எல்லாம் சரியாகப்போய் விடும். ஏன் வீணாக நாம் அவனை—

வ. (படபடப்புடன்) அவன் யாராக இருந்தாலும் சரி, அதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. நீ சீக்கிரம் விஷயத்தைச் சொல்லுகின்றாயா மாட்டாயா?

மோ. (தனக்குள்) ஸ்ரீதர! உனக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல், கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். (வெளிப்படையாக) ஐயோ! சிற்றன்னை யென்று சிறிதும் கருதாமல், என்னை நீ பெண்டாளவா நினைப்பது?

வ. (அதிக கோபத்துடன்) பெண்டாள நினைத்தானா? யார்? ஸ்ரீதரனா?

மோ. ஐயோ! வேண்டாம்! வேண்டாம்! பிராண நாதா! ஏதோ அறியாமற் செய்து விட்டான். அதற்காகத் தாங்கள் அவனை—

வ. அடா! துரோகி! ஆ! பாதகா! (படபடப்புடன்) இருக்கட்டும். உன்னை யென்ன செய்தாலும் பாவமில்லை.

[மோஹனாவை நோக்கி]

கண்ணே! உனக்கா இப்படிப்பட்ட ஆபத்துவர வேண்டும்? உலகத்தில் "முதல்மனைவியின் மக்களைக் கண்டால், இரண்டாம் மனைவிக்கு ஆகாது" என்பார்கள். அப்படியிருக்க; நீ ஸ்ரீதரனிடத்தில்— சீ! ஸ்ரீதரனா? அக்கொலை பாதகனிடத்தில், பெற்ற புதல்வனிடத்தில் எவ்வளவு அன்பு உண்டோ, அவ்வளவு அன்பும் வைத்திருந்தாயே. அப்படிப்பட்ட உனக்குக் கிடைத்த பலன் இதுதானோ?

[ஆசனத்தை விட்டு இருவரும் எழுந்திருக்கிறார்கள்.]

பெற்ற புதல்வனாக இருந்தாலென்ன, பாராக இருந்தாலென்ன? எல்லோரையும் சமமாகக் கருதவேண்டும். இருக்கட்டும், அப்பாவிக்குத் தகுந்த தண்டனை விதித்த பிறகே, நான் வேறு காரியத்திற் பிரவேசிப்பேன்.

மோ. தண்டனையா? பிராணநாதா! வேண்டாம், ஏதோ அவன் அறியாமல்—

வ. ஸ்! பேசாமலிரு. அப்பாதகனிடததில் நீ காட்டிய அன்பிற்கு நல்ல பலன் அடைந்தாய்! இன்னும் அவன் மீது உனக்கு இரக்கமேன்? சரி, நாம் செல்வோம் வா.

மோ. (இரக்கமுள்ளவளைப் போல அபிநயித்து) ஆ! கடவுளே! எல்லாம் உன் திருவிளையாடல்.

[இருவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

வெற்றிலை.

வெற்றிலையைப் பற்றி "ரா. சேதுபதி" என்பார் எழுதிய வியாசம் கண்ணுற்று மிக்க வியப்புற்றேன்.

தனி வெற்றிலையையேனும், தனிப்பாக்கையேனும், தனிசுண்ணம்பையேனும் உட்கொள்வோரே பிணிக்கு உள்ளாவர் என்பது எவரும் அறிந்த விஷயம். ஆனால் இவை மூன்றையும் ஒருங்கே அருந்துவராகில் அதனாற் பெரிதும் நற்பலனே பெறுவர். ஒருபோதும் அங்ஙனம் அருந்துவதால் தீங்குறாது என்பது திண்ணம்.

தீங்கிழைப்பன இன்னவை யென்று வெகு அழகாகவும், விரிவாகவும் நுட்பமாகவும் ஆய்ந்து "இன்னா நாற்பது" என்னும் நூல் வாயிலாகக் கூறிய கபிலதேவர், ஓரிடத்தேனும் தாம்பூலம் அருந்துதல் தீமை விளைக்கும் எனக் கூறினார் இல்லை. ஆயினும் அப்புலவர் பெருமான் 'கடித்

தமைந்த பாக்கினுட் கூற்படுதல் இன்று' (அதாவது "கடித்தபாக்கினுள்ளே கல்லிருத்தல் தீயது) என்றே கூறக் கண்டேன். இதுமுற்றிலும் உண்மையே. கடிக்கும் பாக்கிற் கல்லிருக்குமாயின் அது பல்லைக்கூசச் செய்வது மன்றி மூர்ச்சை முதலிய தீமையையும் உண்டாக்குவது யானே அனுபவ பூர்வமாகக் கண்டது கிற்க.

வெறும் பாக்கு மெல்லுவதால் சோகை உண்டாகும் எனக் கல்வியறிவில்லாச சாமானியரும் அடிக்கடி சொல்லக் கேட்டிராதார் யார்? ஆகவே பாக்கைத் தனியாகத் தின்பதாலும் அதனுடன் கல் சேர்ந்திருப்பதை நோக்காது கடித் தருந்துவதாலுமே தீங்குண்டாகும் எனத் தெளிக. இத்தகைய கெடுதிகள் நீங்கும் பொருட்டே "உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய கருங்காலி சீவிக் காய்ச்சின களிக் கலந்த இனிய நீரினையுடைய பசிய பாக்குடன் வளர்ந்த வெற்றிலையினை யுடையாரும்" எனப் பொருள் கொண்டுள்ள

"தகைசெய்தீஞ் சேற்று இன்னீர்ப் பசுங்காய்
நீடு கொடி இலையினர்"

என்ற 'மதுரைக் காஞ்சி' வரிகளினும்,

அங்கருங் காலி சீவி ஊறவைத்(து) அமைக்கப்பட்ட
செங்களி விராயகாயும் செம்பழுங் காயும் தீம்தேன்
எங்கணும் குளிர்ந்த இன்னீர் இளம் பசுங்காயும் மூன்றும்
தங்களி செய்யக் கூட்டித் தையலார் கைசெய் தாரே"

என்று ஜீவகசிந்தாமணி இலக்கணையார் இலம்பகச் செய்யுளாலும் அறிஞர்கள் நமக்கு நினைப் பூட்டினர் போலும்.

இனி, வெற்றிலையைப் பற்றிச் சிறிது ஆலோசிப்போமாகில் வெறும் வெற்றிலையைப்பொழுது போக்காகத் தின்னும் வழக்கம் தீதென்றும், அதனால் நாக்குத் தடித்து விடுமென்றும், எவரும் சொல்லாமலே தெரியவரும். வெற்றிலைச் சாற்றிற்கு ஒருவகைக் குணமுண்டு அது நமது உமிழ்நீரோடு கலந்து உட்புகுமாகில், வெகு சுலபமாக நமது ஆகாராதிகளை ஜீரணிக்கச் செய்யும். ஆனால் அதிகாலையில் (சுமார் 10 மணிக்கு முன்பு) 'கொடிக்கா'லிலிருந்து வெற்றிலையைக் கிள்ளி, எடுத்தாற்றான் வெற்றிலைக்குரிய ஜீரணிக்கத் தக்க திராவகத் தன்மை அதில் மிகுதியும் தங்கியிருக்கும். ஆகவே, இவ்வுண்மையை யறிந்தோர் சூரிய னொளி மிகு முன்னரே வெற்றிலையைக் கிள்ளுவர். நிற்க.

தாம்பூலம் போடுவதால் பல விதத்தினும் நாம் நற்பயனெய்துவதுடன் உதட்டிற்கு அழகையே உண்டுபண்ணிக் கொள்ளுகிறோம்.

வெற்றிலை போடுவதால் ஆகும் பல நன்மைகளையும் கருதியே நம் முன்னோர்கள், சுபகாலங்களிலும் வேறு விசேஷ சமயங்களிலும் விருந்தினர்கட்கு உபசாரமாகவும் கடமையாகவும் கொண்டு தாம்பூலம் அளித்து வருகின்றனர். அன்னோரது நல்வழக்கம் நம்மை விட்டு நீங்காதது நமது நல் அதிர்ஷ்டமே. புகை யிலையால் மட்டும் வருத்தீங்கே.

இங்ஙனம்.

P. R. விசுவநாதன்:

சாத்தூர்.

விநோதக் கூற்று.

அமெரிகாவில் உள்ள ஒரு தனவானுக்கு மகப்பேறில்லை. அவன் எப்பொழுதும் வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசுபவன். மரணத்தறுவாயிலும் இவனுக்கு அவ்வழக்கம போகவில்லை; இப்பொழுதோ அப்பொழுதோ என்று அவன் நிலைமை இருககையில் அவன் தனது காரியஸ்தனைக் கூப்பிட்டான். இறக்கப் போகிறவனுககு மகவின்மையால், ஆஸ்தி முழுமையும், வெகுகாட் பழகியவனும் அவனது பிரீதிககுப் பாத்திரனாயிருந்தவனுமான தனக்கு அளிக்கவே அழைக்கிறான் என மகிழ்ந்து, காரியஸ்தன், அதிவிரைவாக அவனிடம் வந்தான். வந்ததும் தனவான் அவனை நோக்கி "நீ கணக்கில் புலி யாயிற்றே. இக்கணக்குக்குச் சரியான விடைகூறு: ஒருவனுடைய சேவல் மற்றொருவனுக்கும் அவனுக்கு அடுத்த வீட்டுக்காரனுக்கும் பொதுவான ஓர் சுவரில் 5-முட்டைகள் இட்டது.. சுவர் இருவர்க்கும் பொதுவாகையால் அம் முட்டைகளைப் பங்கிட்டுக் கொள்வதைப் பற்றி இருவர்க்கும் பிரமாத சச்சரவு உண்டாயிற்று. இன்னும் கூட அவ்வழக்குத் தீரவில்லை. நீ எப்படித் தீர்ப்பாய்?" என்றான்.

இது கேட்ட காரியஸ்தன் "ஆ! என்ன பெருமூடர்கள் இவர்கள், என் வீணாகச் சண்டைப்படவேண்டும்? ஒன்றை யார்க்கேனும் இருவரும் மனமொத்துத் தானம் செய்து விட்டாற் போகிறது.இல்லையேல, அதனை இரண்டு பைசாவிற்கு விற்று ஆளுக்கு ஒரு பைசா எடுத்துக் கொண்டாற் போகிறது." என்றான்.

தனவான் வயிறுவெடிக்கச் சிரித்து "புத்திசாலியாகிய நண்ப! சேவல் முட்டையிடுமோ? பெட்டைக் கோழியன்றோ முட்டையிடும்?" என்னக் காரியஸ்தன் வெட்கி நின்றான்.

மு. ராஜகோபாலன்.

விடுகதை வினாவுக்கு விடை.

"அலைப்பெயரும் ஒலிப்பெயரும் உறுப்பின் பேரும்
அடங்கியமூன் றெழுத்துமொழி யாதோ?" என்று,
பலர்க்குமறி வுணர்த்திமன இருளையோட்டும்
பான்மைவிவே கோதயமே! பாரிலெங்கும்
நிலைத்தபுகழ் மிகுத்தநினைத் 'தில்லையாடி'
நேர்த்தபொருள், ஐங்கதிசேர்ந் துளதாய் மிக்க
விலைக்குரிய சிறப்புறுநல் விலங்கதான
வியன் 'குதிரை' என அவற்கு விளம்புவாயே.

காட்டுப்புத்தூர் கர்ணமும் தமிழ்ப்பண்டிதருமான
M. கோவிந்தசாமிப் பிள்ளை.

சீராரும் கற்'தில்லை யாடி'எனப் பெயர் புனைந்தோன் செப்பலுற்ற
ஏராரும் விடுகதைக்கேற் கேற்றவிடை யாம் 'குதிரை'என்றே மிக்க
காராரும் திருக்கூடல் மாணவர் செந்தமிழ்ச் சங்கம் கவினவந்த
பேராரும் செய்யவிவே கோதயமே! நீ அவற்குப் பேசு வாயே.

பெ. வெ. மீனாக்ஷிசுந்தரம்.

---

* தற்சோதனை.

[*இது Herbert என்ற ஆங்கிலப்புலவர் இயற்றிய Self-Examination என்பதன் கருத்தை அனுசரித்து எழுதப்பட்டது.]

அனுதினம் யாவரும் அவரவர் தொழில் முடித்(து)
இனிதினைப் பாற இன்துயிற் கேகையில்,
காலை முதலாக் கண்துயில் வரைக்கும்
வேலைகள் எவை எவை விரும்பிப் புரிந்தனம்,
அவையெலாம் ஒருங்கே ஆக்கி மனத்திடை
''இவைகளில் நற்செயல் எத்தனை இயற்றினம்?
பொல்லாச் செயல்கள் புரிந்தனம் எத்தனை?

எல்லாச் செயல்களும் எவ்வளவு?'' என்றே
ஒத்துப் பார்த்ததற் கொருகணக் கிட்டு,
வைத்தபின், மறுநாள் வாய்த்தநம் வேலை
யாதென எண்ணியும், யாம்செயும் தொழிலில்
தீதொரீஇ உயிர்க்குச் சேமமா கியதொழில்
கணக்கினில் உயரவும், கடியதாம் மற்றதை
வணக்கியே நாள்தொறும் மாய்ந்திடும் படிக்கும்
அதிகக் கவனமா அநுட்டித்து வந்தும்
எதிரும்ஓர் அற்ப இன்பினில் மிக்க
குதுகலிப் படைந்தகண் குருடரா காமலும்;
எதுநமக் கெய்தினும் ஈசுரச் செயலெனத்
தாழ்விலா முயற்சி சார்வமேல், நம்பால்
துயர் தலை காட்டித் தோன்றுமோ? செய்கடன்
மயர்வறச் செய்வமேல் மன்னுவம் இன்பே.

A. R. ஸ்ரீநிவாஸ முதலியார்,
ஆனைமலை.

விடுகதை வினா.

பாரெலாம் புகழும் விவேகோ தயமே!
பதிவ்ரதை ஒருத்திஐந் தெழுத்துப்
பேரினள். 'முனி'ஆம் மூன்றுடன் ஐந்து.
பிறங்(கு) இரண்(டு) ஐந்தும்ஆம் 'திங்கள்'.
காருறு 'வேழம்' ஒன்றுநான்(கு) ஐந்து.
'கபி'யதாம் இரண்டு நான்கு ஐந்து.
மோருறு 'தயிர்' ஒன்(று) ஐந்(து) இவள் யாவள்?
மொழிகவெண் பாவினில் விடையே.

R. S. கங்கா ஜடேச சர்மா,
இரண்டாங் கட்டளை.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து.

(270-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—10.

தீயோர் செய்கையால் நல்லோர்க்கும் தீமை.

ஒரு காலத்தில் எல்லாப் பட்சிகளும் ஒருங்கு கூடிச் சமுத்திரக் கரைக்குச் சென்று கொண்டிருந்தன. அப்பொழுது மந்தகதியுள்ள சிட்டுக் குருவி ஒன்று,ஒரு காகத்தோடு போயிற்று. மார்க்க மத்தியில் தயிர்ப்பானையைத் தலையில் வைத்துக் கொண்டு போகிற ஒரு இடையனை அவை பார்த்தன. பார்த்ததும், காக்கை, தனக்குள், "திறந்துள்ள தயிர்ப் பானையைக் கொண்டு செல்லும் இவன் மூடனே. நான் ஆகாயத்தில் இருந்தபடியே அவனறியாமல் தயிர்க்கட்டிகளைத் தின்கிறேன்." எனக்கூறி அதைத் தின்றது. பன்முறையும் அத் துஷ்டப் பறவை தொந்தரவு செய்யவே, அதைப் பொறாத அவ்விடையன் தயிர்ப் பானையைக் கீழேவைத்து அண்ணாந்து நோக்கினன். காகத்தையும், சிட்டுக்குருவியையும பார்த்ததும்,தன் கையிலிருந்த தடியை வீசினன். காகம் ஓடிவிட்டது. நிரபராதியும் மந்தகதியுள்ளதுமான சிட்டுக் குருவி இறந்து விழுந்தது.

துஷ்டனது துர்ச்செய்கை சாதுக்களுக்குத்துன்பம் உண்டு பண்ணுகிறது. ராவணன் சீதையை அபகரித்துச் செலல சமுத்திரத்திற்குப் பந்தனம் வந்ததன்றோ?

கதை—11.

அதிக ஆசை ஆகாது. ஆசையில்லாமலும் இருக்கக் கூடாது. பேராசையால் கைப் பொருளும் போய்விடும்.

ஒரு நரி பசியினால் வாடி ஆகாரத்திற்காகக் காட்டில் அலைந்தும் அதற்கு ஏதும் கிடைக்கவில்லை. பிறகு நிராசையுடன் அது திரும்பிவரும் பொழுது அகஸ்மாத்தாய் ஒரு ஆட்டுக்குட்டியைப் பார்த்து அதைக் கௌவிக் கொன்றது. பின் அதன் மாமிசத்துண்டைக் கௌவிக் கொண்டு வீணைக்குவரும்போது ஆற்று நீரில் ஒரு மீனைப் பார்த்தது. கிடைத்த மட்டில் திருப்தியடையாத அந்நரி, வாய் மாமிசத்தைக் கீழேவைத்து,ஆற்றுமீனைக் கௌவ ஓடிற்று. நரி வருவதைக் கண்ட மீன், உடனே தண்ணீரில் மூழ்கிற்று. ஏமாந்த நரி திரும்பி வருவதற்குள், ஆகாயத்தில் பறந்துகொண்

டிருந்த ஒரு கழுகு இறங்கிவந்து ஆட்டிறைச்சியைத் தூக்கிக் கொண்டு பறந்து விட்டது. அதனால் இரு விதத்திலும் ஏமாற்றப்பட்ட நரி தன்னையே தனது அறியாமைக்கு நொந்து கொண்டு பட்டினியுடன் வளைக்குச் சென்றது.

கதை—12.

இக் காலத்தில் நல்ல உடை யணிந்தவனையே எல்லோரும் அறிஞனென மதிக்கிறார்கள். டம்ப மில்லாதவனை ஒன்று மறியாதவனென நினைக்கிறார்கள். இதை விளக்கும் கதை வருமாறு.

தரித்திரனான வித்துவான் ஒருவன் தனது கந்தை உடையுடன் ஒரு பிரபுவின் வீட்டிற்குச் சாப்பிடச் சென்றான். அவனைப் பிரபு வாயினாற் கூட உபசரிக்கவில்லை. வித்வான் தனது கந்தையே அதற்குக் காரணமென அறிந்து, மறுநாள் விலையுயர்ந்த உடையை இரவலாகப் பெற்று அதனை உடுத்திக்கொண்டு அவ் வீட்டிற்கே சென்றான். பிரபு அன்று முதனாள் போலிருக்க வில்லை. பண்டிதனைக் கண்டவுடன் ஆசனத்தை விட்டெழுந்து, கைலாகு கொடுத்து, மற்றப் பிரபுக்களைப்போல உபசரித்தான். பின்பு கால்கழுவ ஜலம் கொடுத்துச் சாப்பாட்டிற்கும் அழைத்துச்சென்றான். பண்டிதன், சாப்பிடுவதற்கு முன், தனது மேல் வஸ்திரத்தைக் கீழே விரித்து வைத்து, "உடையே! உண்ணுக" என்றான். அதைப் பார்த்த பிரபு "எதற்காக இப்படிச் செய்கிறீர்?" என வித்துவானைக் கேட்டான். வித்துவான் "தனிக! நேற்று நான் கந்தையுடையுடன் வந்த பொழுது நீர் என்னை லட்சியம் செய்யவில்லை. இப் பொழுது விலையுயர்ந்த இவ் வாடைதான் உம் மதிப்பிற்குரிய தாயிற்று. ஆகையால் வஸ்திரத்திற்குத் தான் அன்னம்" என்றான். பிரபு வெட்கினான்.

(இன்னும் வரும்.)

வி. கு. நடராஜன்.

சமாசாரக் கொத்து.

நச்சினார்க் கினியர் ஞாபகச்சின்ன மகோத்ஸவமும் பரிசளிப்பும்:— இவை வருகிற டிஸம்பர் மீ 8௳ 9௳ களில், மதுரைப் பிரபல நியாய வாதியாகிய ஸ்ரீ: தக்ஷிணாமூர்த்தி துரை ராஜா பீ. ஏ. பி. எல். அவர்கள் அக்ராஸநாதிபத்தியத்துடன் விக்டோரியா—எட்வர்ட்ஹாலில் நடைபெறும். இருதினங்களில் பலவித்வான்களின் திவ்யப் பிரசங்கங்கள் நடைபெறும். யயாதி நாடகமும் நடக்கும்.

எட்டயபுரம் ராஜாவின் உயர்தர வித்யாசாலைக் கல்விக் கழகம்:— இளசைப் பள்ளியில் உயர்தர வகுப்பு மூன்றிலும் பயிலும் மாணவர்க்குத் தமிழ் அறிவு மிகுதற்பொருட்டு ஸ்தாபிக்கப்பெற்று நடைபெற்று வரும் இக்கழகம் சென்ற ஸெப்டம்பர்மீ 22உ வியாழக்கிழமை அதன் நிரந்தர அக்ராஸநரும் இப்பள்ளித் தலைவருமான ஸ்ரீ டி. கிருஷ்ணசாமிஐயங்கார் பி. ஏ. எல். டி. யின் தலைமையின் கீழ்க்கூடிற்று. தலைவரவர்கள் தம் முன்னுரையில், ஊக்கமும் தமிழபிமானமும் மிக்க மதுரைக்காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரது அக்ராஸநத்தின்கீழ், சென்ற 16 வருடங்களாக நடைபெற்றுவரும் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் சிறப்பைப் பற்றி வெகுநாழிகை பேசினர். மதுரைத்தமிழசசங்கம் போல் மிக்க பணக்கார சங்கமாக அஃதில்லா விடினும் தமிழ் அபிவிருத்தி செய்ய முயல்வதில் அதனினும் ஒருசிறிதும் தாழாத தென்றும், மாணவர் பலர்க்கும் மற்றையோர்க்கும் இது செய்து வரும் நன்மைக்கு அளவில்லை யென்றும் கூறி, இக்கழகமும், தன் பொங்கு புகழை அதுபோல் எங்கும் பரப்பி நீடூழி நிலவவேண்டு மென்றும், அங்ஙனம் நிலவுவதற்கான மார்க்கங்கள் இவை என்றும் எடுத்துரைத்தனர். இதன்பிறகு இக்கலாசாலைத் தமிழ்ப் பண்டிதா ஸ்ரீ:ரங்கையங்கார் இக்கழகத்தின் உப-அக்ராஸநாதிபதியாகவும், ஸ்ரீ: எஸ். கோவிந்தன் காரியதரிசி யாகவும், எஸ் வீராசாமி, ஈ. சுப்பையா, கெ. மீனாக்ஷிசுந்தரம், டி. ஸ்ரீநிவாசன் ஆகிய இவர்கள் முற்கூறியவர்களுடன் நிர்வாக சபையினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். பின்பு கூறப்பெற்ற மங்கல வாழ்த்து அரச வாழ்த்துடன் சபை நிறை வேறியது:—சங்காபிமானி.

இளங்காடு நற்றமிழ்ச்சங்கம்:—கார்த்திகைமீ 5உ ஆதிவாரத்தன்று இச்சங்கம் ஸ்ரீ: கந்தசாமிச் சேதுராயரின் தலைமையின் கீழ்க் கூடிற்று. அன்றுசுமார் 500 பேர்கள் கூடி யிருந்தனர். இக் கூட்டத்தில் விண்ணமங்கலம் ஸ்ரீ தண்டாயுதபாணிக் காடவராயர் 'இல்லறம்' என்பதைப் பற்றி நன்கு பிரசங்கித்ததும், ஸ்ரீ அருணாசல வேளார், திருவிளையாடற் புராணத்துள்ள 'மண்சுமந்தபடல'த்தை இயலிசைத்தமிழுடன் உபந்யசித்தனர். அநந்தரம் அக்ராஸநர் 'தந்தைசெய்ந்நன்றி'யைப்பற்றிப் பிரசங்கித்து, அழகாகப் பிறவிஷயங்கட்கும் முடிவுரை கூறினர். இவையானதும், காரியதரிசி எழுந்து, மதுரை ஸ்ரீ: ம. கோபாலகிருஷ்ணையர், இச்சங்க 'சண்முகவிலாச புத்தகசாலை'க்குப் புத்தகம் அளித்ததையும் சங்க சம்பந்தமான பிறவிஷயங்களையும் பற்றிப்பேசினர். அப்பால் கூறப் பெற்ற மங்கல வாழ்த்துடன் சபை நிறைவேறியது. ப. வையாபுரிச் சேதுராயன்

மதுரைக் காலேஜ்:— வித்யாபிமானியும் உதாரசீலருமான ஆனரபிள் ராவ் பகதூர் ஸ்ரீ: எஸ் ஆர். எம். எம். ஏ. அண்ணாமலை செட்டியாரின் பேருதவியால் கூடிய சீக்கிரத்தில் இக்காலேஜ் முதல்வகுப்புக் காலேஜாகி பீ. ஏ. வகுப்புக்களையும் கொண்டு விளங்கும் என்பதில் ஐயமில்லை. இது இங்ஙனம் ஆகும் காலையில், இப்பொழுதுள்ள இடம் பற்றாதாகையால் இதற்குக் கூடிய சீக்கிரத்தில் டெக்னிகல் ஸ்கூலுக்கு அருகிலாவது, நகர் மத்தியில் உள்ள பெரிய கண்ட வெளியிலாவது சுமார்

லக்ஷ ரூபாய் செலவழித்துப் புதிய கட்டிடம் கட்டுவார்கள் என்றும், இக்கட்டிடம் கட்டி முடியும் வரை ஸ்கூல் பைனல் வகுப்புக்களும அவற்றிற்குக் கீழ்தர வகுப்புக்களும் போடி நாயக்கனூர் ஜமீந்தார் பங்களாவில் வைதது நடததப் பெறு மென்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

பத்திராதிபர்.

புத்தக மதிப்புரை.

குமண நாடகம்:—மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தாரால் 12 வருடங்களுக்கு முன் நடிக்கப் பெற்ற இந்நாடகம், இப்பொழுது வித்வான் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரது குமண சரித்திரத்தைத் தழுவிப் பசுமலை உயர்தர கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ ந. ரா. சுப்பிரமணிய சர்மாவால இயற்றப்பட்டுளது. கதை சிறிது மாறுபாடுகளுடன் இதில் வரையப்பட்டுளது. ஆசிரியர், மாணுக்கராக இருந்தகாலத்தில் எழுதப்பட்ட இது, அவரது தற்கால மாணவர்களின் வேண்டுகோட்கிணங்க வெளியாகி யுள்ளது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கேனும் மதுரைப் புதுமண்டபம் புத்தக வியாபாரி இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனூர்க்கேனும் எழுதிப்பெறுக. விலை அணு 6.

நம்மை யாளும் ராஜ மகிமை வாழ்த்து:—இது திருவையாறு ஸெண்ட்ரல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ: சி. வீ. குமாரசாமிப் பிள்ளையால் சோழ நாட்டுக் கலாசாலை அதிகாரிகள் பலரது வேண்டுகோட்கிணங்கி எழுதப்பட்ட தாகும. வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரம ஸ்ரீ: பி. கே. ஸ்ரீநிவாசாசாரியர் இதற்குமுகவுரை கூறியிருக்கிறார். இதில் 'அரசர் மாண்பு' அவரது திருவங்க மகிமை' 'யந்திர மகிமை' 'வாழ்த்துக் கவிகள்' முதலியன அழகாக எழுதப்பட்டுள்ளன.. இது ராஜபக்திப் பாக்கள் பாடும் எக்கலாசாலை மாணவர்க்கும் பிரயோஜனமாகு மென்று எண்ணுகிறோம். விலை அணு 2.

இந்தியாவின் அரசியல்:—இது மதுரை நியாய வாதியாகிய ஸ்ரீ: எம். எஸ. சேஷையங்கார் பி. ஏ. பி எல். எழுதியதாகும். ஆங்கிலம் கல்லாதவர்களும் கிராமவாசிகளும், எளிதில் ஆங்கிலேயர் நம்மை ஆளும் விதத்தையும் அதன் 'யந்திர'த்தையும் அறிந்து கொள்ளுமாறு, மிக்க எளிய தமிழ நடையில் எழுதப்பட்டதாகும். இப்பொழுது வெளியாகி உள்ளது முதற்பாகமே. இதில் இங்கிலாந்தில் உள்ள மகாமந்திரசபை முதல், இநதியாவிலுள்ள கிராமங்கள் தோறும் காணப்படும் கிராம உத்தியோகஸ்தர் வரைஉள்ள அரசியல் அவயவங்கள், உள்ளவை உள்ளபடி எழுதப்பட்டுளன. மாணவர்களும அரசாட்சி முறை அறிய விரும்பும் அனைவரும் அவசியம் படித்துணரத்தக்கது. ஆயினும் விலை 4 அணுவாக விதியாமல் இரண்டே அணுவாக வைத்திருநதால் அனைவரும் அதிக சிரமமின்றிப் பெறததகககதாகும். நிற்க. இனி அவயவங்களின் குணதோஷங்களைப் பற்றியும், பொதுஜன நன்மையைக் கருதிய அவசிய சீர்திருததங்கள் சம்பந்தமாக நம் தேசபிமானிகளின் உணர்சசியைப்பற்றியும், ஆசிரியர் எழுத நினைத்துள்ள இரண்டாம் பாகத்தையும் ஆவலுடன் விரைவில் எதிர்பார்க்கிறோம்.

பத்திராதிபர்.

☞ மற்றைய புத்தகங்களைப் பற்றிய மதிப்புரை அடுத்த சஞ்சிகையில் வரும்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்

மனம்போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல. இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:— இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பலஉபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டன. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:—இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகககூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:—இதில் எளிய நிலைமையை எயதியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக் கொள்ளத்தக்க விதத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுவும் வெளிவந்து விட்டது.

ஒவ்வொன்றின் விலையும் அணு எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,

பிரமபூர், சென்னை,

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியவை.

1.	தமிழ்மொழிவரலாறு—(காலிகோ)	2—0—0
2.	நபாவதி அல்லது காணாமற் போன மகள்	1—0—0
3.	கலாவதி ஓர் புதிய தமிழ் நாடகம்.	1—8—0
4.	நாடகவியல் (ஓர் நாடகத் தமிழிலக்கண நூல்)	0—8—0
5.	தனிப்பாசுரத் தொகை. (முதற்பகுதி)	0—4—0
	(ஜி. யூ. போப் ஐயரவர்களால் ஆங்கில பாஷையிற்செய்யுளாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது; கலிகோ பயிண்டு)	1—0—0
6.	பாவலர் விருந்து (செய்யுள் நூல்கள் கொத்து)	0—8—0
	ஷை கலிகோ	1—0—0
7.	மதிவாணன்(புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க்கதை)	0—8—0
	ஷை (துணியட்டை யிட்டது.)	0-12—0
8.	மான விஜயம் (செய்யுள் நாடகம்.)	0—8—0
9.	ஸ்ரீமுனிய சிவனார் சரித்திரம்.	0—2—6
10.	மதுரைமாலை (ஸ்ரீஸபாபதி முதலியாரவர்கள் இயற்றியது)	0—1—0

வேண்டுவோர் மதுரையிலிருக்கும் 'விவேகோதயம் ஆபீஸுக்கு எழுதிப் பெறுக.

பொருத்தமான ஔஷதம்.

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வராதென்பது கேள்வியல்ல. வரத்தான் செய்யும். அப்படி வருகிறதும் காலத்துக்குப் பொருந்தி இருக்கிறது.

மெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப்பார்களா? அல்லது எவ்விதவியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத்தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்க நிக்ரஹ மாத்திரை.

களை உபயோகித்து நலம் பெறுவார்களா? வென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி. மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடுகளைந்து, மனதுக்கும் தேகத்துக்கு முள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. அவைகள் ரத்தத்தை சுத்தி செய்து விர்த்தியாக்கி நரம்புஸ்தானங்களை உறுதிப்படுத்தி, புத்தி தீக்ஷணியத்தைக கொடுத்து, வீரியஸ்கலித ரோகங்களைக் குணப்படுத்துகின்றன. இவை தாம் பலத்தைக் கொடுக்கத் தக்க திவ்ய மருந்து.

மருந்துசெய் வதில் கெடுதி விளைவிக்கக்கூடியவைகள் ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு அதை இனாமாய்க் கொடுக்கிறோம்.

அதை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய தவசியம்.

ஒரு பெரிய வேலை.

எந்த உயர்ந்த உத்தியோகத்திலிருந்தாலும் கூலிவேலை செய்தாலும் தத்தம் தேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முதல் வேலையென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
77, மேலக் கோபுரவீதி, மதுரை.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்.